

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.கழகத்தின் சென்னை மேற்கு மாவட்ட மீனவர் அணித் தலைவர் கதிரேசனின் துணைவியார் திருமதி லாவண்யா அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்ததையொட்டி, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈஸ்வரன் தெருவில் உள்ள அவர்களது இல்லத்திற்கு 1.12.2025 அன்று நேரில் சென்று திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து, விபத்தில் காயமடைந்த கதிரேசன் அவர்களிடம் உடல் நலம் விசாரித்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்ளார்.

### அரக்கோணத்தில்

# சென்னை - மைசூர் வந்தே பாரத் ரயில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 03 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில், சென்னை மைசூர் வந்தே பாரத் விரைவு தொடர் வண்டி, அரக்கோணத்தில் நிறுத்தம் ஏற்படுத்தி, நின்று செல்ல தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்கமா? என்று விதி எண்377ன் கீழ் வேண்டுகோள் விடுத்தார்.



சென்னையிலிருந்து பெங்களூரு, கோயம்புத்தூர், மற்றும் திருப்பதி போன்ற நகரங்களுக்கு செல்லும் விரைவு தொடர்வண்டிகள் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதி வழியாக செல்கின்றன. ஒவ்வொரு தினமும் 50000க்கும் மேற்பட்ட பயணியர்கள் அரக்கோணம் தொடர் வண்டி நிறுத்தத்தை பயன்படுத்தி வருகின்றனர். தொழிற்சாலை தொழிலாளர்கள், பாதுகாப்புத்துறை பணியாளர்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள், விவசாயிகள் போன்ற பல்வேறு தரப்பினரும் ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் திருத்தணியை சேர்ந்த பொதுமக்களும் அரக்கோணம் தொடர் வண்டி நிறுத்தத்தினால் பயனைடைந்து வருகின்றனர்.

எம்.ஆர்.எப். டயர்ஸ், ராம்கோ சிமென்ட்ஸ், லார்சன் அன்ட் டியூப்ரோ, டி.வி.எஸ். போன்ற பல்வேறு தொழிற்சாலைக் கூடங்களும், ராஜாளி கடற்படை விமானத் தறம் போன்றவை அமைந்த போதிலும், அரக்கோணத்தில் மைசூர் வந்தே பாரத் விரைவு தொடர்வண்டியில் அரக்கோணத்தில் நிறுத்தம் இல்லாத காரணத்தினால், பயணியர்கள், காட்பாடிக்கோ அல்லது சென்னைக்கு சென்றுதான் தொடர் வண்டியில் ஏறும் வருத்தமான நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை பெங்களூரு இடையிலான துாரத்தை, ஆறு மணி நேரத்திற்குள் கடந்து செல்லும், வந்தே பாரத் விரைவு தொடர் வண்டி சில நிமிடங்கள் மட்டும் அரக்கோணத்தில் நின்று சென்றால், ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பயணியர்கள் பயன் அடைவார்கள் என்பதால், இரயில் வேத்துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க மக்களவை தலைவர் ஆணையிட வேண்டும் என்று மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் விதி எண்.377ன் கீழ் வேண்டுகோள் விடுத்தார்.


### செஞ்சி தொகுதி கிளைக் கழகச் செயலாளர்கள் – பேரூர் வார்டு செயலாளர்கள் –

# வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, டிச.3-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதிகிளைக் கழக செயலாளர்கள், பேரூர் வார்டு செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்க உள்ளார்.



இது குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்,

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி கிளைக் கழகச் செயலாளர்கள், பேரூர் வார்டு செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் 5.12.2025 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி அளவில் விழுப்புரம் மாவட்ட மண்டல பொறுப்பாளர், உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் செஞ்சி திண்டிவனம் சாலையில் உள்ள ஊரணி தாங்கள் சஞ்சனா பேலசில் நடைபெறுகிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்க உள்ளார்.

கூட்டத்துக்கு வருகை தரும் கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஊரணித் தாங்கள் சஞ்சனா பேலஸ் எதிரில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் பங்கேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகள்!

## கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, டிச. 3 –

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

அவரது வாழ்த்து செய்தி வருமாறு.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊனம் என்ற சொல்லை நீக்கி மாற்றுத்திறனாளிகள் என பெயர் சூட்டியும், அவர்களுக்கென தனித்துறையைக் கண்டு, தனி நல வாரியம் அமைத்தும், அத்துறையை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கி மாற்றுத்திறனாளிகளின் இதயங்களில் இன்றும் நீங்க அகல் விளக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை லட்சக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இன்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நன்றி உணர்வுடன் வணங்கி போற்றுகிறோம்.



அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் துறை அமைச்சரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மலர பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களான தாயுமானவர் திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு இல்லம் தேடி ரேஷன் பொருட்கள் வழங்குதல், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வீடு ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை,

ஒருகால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் விலையில்லா இணைப்புச் சக்கர ஸ்கூட்டி, அதி நவீன சக்கர நாற்காலி வழங்குதல்,

தன்னார்வத் தொண்டும் மூலம் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாற்றுத்திறனாளிகள் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி, மதிய உணவு திட்டம், கடும் மாற்றத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000/ மற்றும் ரூ. 1500/ உயர்த்தி வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தின் மூலம் சமூக நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விபத்து இறப்பு தொகை இரு மடங்கு உயர்த்தி வழங்கி ரூ. 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்குதல்,

கல்வி உதவித்தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்குதல், சிறப்பு பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கான தொகை ரூ. 1200/ இருந்து ரூ.1400/ உயர்த்தி வழங்குதல், அரசுத் துறையில் பணியாற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டிஎன்பிஎஸ்சி நடத்தும் துறைத் தேர்வி ருந்து விலக்கு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு உட்பட்ட சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கடை வைத்து வாழ்வாதாரத்தை காக்க அரசாணை வெளி யிட்டது, மாற்றுத்திறனாளிகளின் நீண்ட நாள் கனவான, சென்னை மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரைகளில் மாற்றுத்திறனாளிகள் கடல் நீரில் தங்களின் பாதங்களை பதித்து மகிழ்வூட்ட சிறப்பு நடை பாதை அமைத்தல் போன்ற சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தி வருவதுடன்,

”இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை நியமன உறு ப்பினர்களாக நியமித்திட ஆணை பிறப்பித்ததுடன் அதனை உடனடியாக நிறைவேற்றும் விதமாக நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மாற்றுத்திறனாளி களை, நியமன உறுப்பினர்களாக நியமித்து, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்டி,

வரலாற்றில் இடம்பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர், வாழும் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில், திமுக மாற்றுத் திறனாளிகள் அணியின் சார்பாகவும், அனைத்து மாற்றுத்திற னாளிகள் சங்கங்களின் சார்பாகவும் நன்றியையும், பாராட்டுக்களை யும் தெரிவித்து வணங்கி மகிழ்கின்றேன்.

மேலும், உலகெங்கும் வாழும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான உரிமைகளையும் பாதுகாத்து, பல்லாண்டு காலம் வாழ, இந்நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழி நின்று வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு, திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கடந்த 3 ஆண்டுகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, டிச. 3 -

கடந்த 3 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? நாடாளுமன்றத்தில் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி, தமிழ்நாட்டின் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டிக்கு சுதேசதர்சன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் கீழ் ஒன்றிய அரசு (CFA) மத்திய நிதி உதவியினை தமிழ்நாட்டிற்கு நீட்டித்துள்ளதா?

சுற்றுசூழல் சுற்று என்ற கருப்பொருளின் கீழ் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் சுற்றுச்சூழல் சுற்றுலா திட்டங்க ளின் விவரங்கள் என்ன?



தருமபுரி மற்றும் அதனை ஒட்டி உள்ள ஒகேனக்கல் வனப்பகுதிகளில் புதிய சுற்றுலா தலங்களை மேம்படுத்தும் வகையில் ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளதா? வழங்கியிருந்தால் கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் அத்தகைய திட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட,விடுவிக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட நிதிகளின் முழு விவரங்கள் சமூக அடிப்படையிலான சுற்றுலா முயற்சிகள், டிஜிட்டல் பிரச்சாரங்கள் மூலம் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று ஒன்றிய சுற்றுலா துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷிகாவத்திடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

### எஸ்.ஏ.நந்தகுமார் ஏற்பாட்டில்

# திருப்பூரில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருப்பூர், டிச. 3 -

துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.கழக பொறியாளர் அணி சார்பில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் வழிகாட்டுதலின் படி, கழக பொறியாளர் அணி செயலாளர் எஸ்.ஏ.பி.கருணா, திருப்பூர் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார் ஆகியோர் ஆலோசனையின் படி கழக பொறியாளர் அணி துணை செயலாளர், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அம்பாள் எஸ்.ஏ.நந்தகுமார் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் போட்டி 29.11.2025 சனிக்கிழமை அன்று அன்னூர் ஸ்ரீ அம்பாள் துளசி பப்ளிக் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ரூபாய் 12,000 ம் மற்றும் சுழற்கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூபாய் 7,000 ம் மற்றும் சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5,000 ம் மற்றும் சுழற்கோப்பையும், நான்காம் பரிசாக ரூபாய் 3,000 ம் மற்றும் சுழற்கோப்பையும் வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC2) ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC2) ஆலோசனைக் கூட்டம் வருகிற 13-12-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC2) இருவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : SIR குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.12.2025

என்.ஆர்.இளங்கோ எம்.பி..
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை



திருப்பத்தூர் நகரத்தில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பாக பள்ளி மாணவ , மாணவிகளுக்கு கையுந்து போட்டியினை சார்ஆட்சியர் விளையாட்டு மைதானத்தில் மாவட்ட செயலாளர். க.தேவராஜ் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் சு.இராசேந்திரன், சங்கீதாவெங்கடேஷ், வி.வடிவேல், கே.எ.குணசேகரன், க.முருகேசன், எம்.ராஜேந்திரன், வேலூர் ஜி.ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் வடக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில், இளைஞர் எழுச்சி நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உணவு, கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. ஒன்றிய கழக செயலாளர் கனக கோவிந்தசாமி ,துணைச் செயலாளர்கள் தர்ம.மணிவேல் கோவிந்தராஜ், அன்பழகி ராஜேந்திரன், இளைஞர் அணி அமைப்பாளர் பட்டி.சு.வசந்த குமார் துணை அமைப்பாளர்கள் திருஞானம், பால.பாரதி, வீரப்பாண்டியன், வாஞ்சிநாதன், இலக்கிய அணி பட்டி. கருணாநிதி, மாவட்டப் பிரதிநிதி பொன்.சிவக்குமார் ம.மதியழகன் வி.எம்.ஆர்.பாலகிருஷ்ணன், ஆர்.கோவிந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் இந்து மேல்நிலைப் பள்ளியில் கழக அரசால் பதினோராம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை அ.செ. விஸ்வநாதன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் நகர மன்ற தலைவர் பத்தேகான் ஏஜாஸ் அஹமத் இந்து கல்விச்சங்க செயலாளர் டி.ஆர்.முரளி காந்தராஜ் நகர கிழக்கு செயலாளர் எம்.ஏ.ஆர்.ஷப்பீர் அஹமத் தலைமை ஆசிரியர்,மற்றும் கழக நிர்வாகிகளும், ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.